**O.S.No.262/2017**

**Date:19.12.2018**

**வாதி தரப்பு சாட்சி 1 – அம்பலம், த-பெ. கருப்பையா**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வயக்காட்டை உழவு செய்ய விடாத காரணத்தால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் ஞாபகமில்லை. எத்தனை இலக்கச் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2இலக்கச் சொத்து ஆனால் ஞாபகமில்லை. இரண்டு சர்வே எண்ணிற்கும் நான்குமால் சொல்லமுடியுமா என்றால் தெரியாது. ஆதியில் இந்த சொத்து என்னுடைய தகப்பனார் கருப்பையா அம்பலத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து என்னுடைய தகப்பனார் கருப்பையா அம்பலம் உழவடை செய்தார் என்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. என் தகப்பனார் கருப்பையா அம்பலமும், அவருடைய மூன்று சகோதரர்களும் சேர்ந்து பாத்தியப்பட்டது என்றால் பாத்தியப்பட்டது. பின்னர் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. எனது தகப்பனாரும் அவருடைய மூன்று நபர்களும் சேர்ந்து லெட்சுமி அம்மாளுக்கு எழுதி கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.1. வா.சா.ஆ.1ல் என் தகப்பனாரும் அவருடைய மகன்களும் சேர்ந்து எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். 27.04.1967ல் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் என்றால் சரிதான். நான் அப்போது பிறக்கவில்லை என்றால் இல்லை நான் பிறந்துவிட்டேன். வா.சா.ஆ?1 கிரைய ஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் படிக்கத் தெரியாது. வா.சா.ஆ.1ல் என் தகப்பனாலர் மற்றும் அவரது மகன்களும் சேர்ந்து லெட்சுமி அம்மாளுக்கு சுவாதீனத்தை ஒப்படைத்ததாக எழுதப்பட்டது என்றால் எழுதப்பட்டது. லெட்சுமிஅம்மாள் என்னென்ன விவசாயம் செய்தார் என்று தெரியுமா என்றால் நான்தான் விவசாயம் செய்தேன். வா.சா.ஆ.2 ஆவணம் எனது தகப்பனாரும் லெட்சுமிஅம்மாளும் செய்து கொண்ட ஒப்பந்தமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்தேன் என்றால் சரியல்ல. 1967ல் இத்தகைய பிரிண்டட்டு படிவம் கிடையாது என்றால் தெரியாது. இந்த வா.சா.ஆ.2ல் 3 வருட காலத்திற்கு உட்பட்டு குத்தகை எழுதப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணம் எழுதப்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் இருந்தேன். மேற்படி வா.சா.ஆ.2 ல் நான் சாட்சிக் கையொயப்பம் இட்டுள்ளேன் என்றால் இல்லை. மேற்படி ஒப்பந்தத்தில் யார்யார் சாட்சிக் கையொப்பம் இட்டார்கள் என்றால் பாக்கியம், பிச்சை என்று சொன்னார்கள். எனது தந்தை லெட்சுமி அம்மாளுக்கு குத்தகை கொடுத்ததற்கும் அதை லெட்சுமி அம்மாள் வாங்கியதற்கோ ஏதேனும் ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை ஆனால் கடிதம் தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் எந்த வருடம் இறந்தார் என்றால் 1980ல் காலமானார். எனது தகப்பனார்

1980ல் இறக்கும் வரை என் தகப்பனார் பெயரில் உழவடை பட்டா வேறு வருவாய்த்துறை ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை ஆனால் சுமூகமாக இருந்தோம். வா.சா.ஆ.3 கடிதம் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.3ல் சர்வே எண்ணோ நான் குத்தகைதாரர் என்றோ சொல்லவில்லை என்றால் படித்துப் பார்க்கவில்லை. இந்த வா.சா.ஆ.4 ஆவணம் அடித்து திருத்தப்பட்டு இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4லும் சர்வே எண் மற்றும் உழவடை சம்பந்தமாக எதுவும் இல்லை என்றால் நான் படித்துப் பார்க்கவில்லை. பிள்ளைகள் படித்துப் பார்த்து சொன்னார்கள். வா.சா.ஆ.5 ஆவணம் எனக்கு அனுப்பப்பட்ட கடிதம் இல்லை என்றும் அது உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முதல் 5 ஆவணங்கள் நான் உழவடைதாரர் என்று எந்தவித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. எனக்கும் லெட்சுமிஅம்மாளுக்கும் எழுத்துமூலமான ஒப்பந்தம் ஏதும் இருக்கிறதா என்றால் இல்லை. என்னுடைய தகப்பனார் 1980ல் இறந்தார் ஆனால் என்னுடைய தகப்பனார் லெட்சுமிஅம்மாளுக்கு குத்தகை கொடுத்ததற்கு எந்த வித ஆவணமும் இல்லை ென்றால் இல்லை. நான் லெட்சுமிஅம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் குத்தகை கொடுத்ததாக எந்த ஆவணமும் இல்லை என்றால் இல்லை. லெட்சுமி அம்மாள் எந்த தேதியில் இறந்தார் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. வருவாய்த்துறை அடங்கல் கணக்கை பார்த்தால் யார் விவசாயம் தெரியவருமா என்றால் தெரியும். லெட்சுமி அம்மாளுக்குப்பின் அவர்கள் மகன்கள் இரண்டு பேர் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் மகன்கள் பெயர் பிச்சை என்ற கோவிந்தராஜன், கிருஷ்ணன் ஆகியோர் ஆவார்கள். லெட்சுமி அம்மாள் இறந்தபிறகு அவரது மகன்களிடம் இரண்டு உழவடையை ஏற்றறுக் கொண்டதற்கான ஆவணம் ஏதும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை நான் எந்தகாலத்திலாவது கிருஷ்ணனுக்கோ கோவிந்தராஜனுக்கோ உழவடை குத்தகை கொடுத்ததற்கான எந்தவித ஆவணமும் இருக்கிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணம் 09.06.2004ல் லெட்சுமிஅம்மாள் மகன்கள் இருவரும் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்னுடைய உழவடை பாத்தய உரிமையும் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்ற வாசகம் வா.சா.ஆ.6ல் இல்லை என்றால் இல்லை. வா.சா.ஆ.6 மூலம் கிரையம் வாங்கி பிரதிவாதி பெயரில் பட்டா மற்றும் வருவாய்த்துறை ஆவணங்கள் மாறுபட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் எழுத்துமூலமான எந்தவித ஒப்பந்தமும் இல்லை என்றால் இல்லை. நான் எந்தகாலத்திலாவது பிரதிவாதிக்கு உழவடை கொடுத்ததாக எந்த ஆவணமும் இல்லை என்றால் இல்லை. நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக உழவடைதாரராக பதிவு செய்ய வேண்டி வட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.10. மேற்படி மனுவில் எவ்வளவு விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது என்றால் 83 செண்டு. ஆனால் மேற்படி மனுவில் கூடுதலான விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது என்றும் ஆனால் நீதமன்றத்தில் விஸ்தீரணம் குறித்து

பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.வா.சா.ஆ.8 ஆவணம் கிஸ்தி இரசீது புகைப்பட நகல் என்றால் சரிதான். அந்த புகைப்பட நகல் அடிப்படையில் எந்த வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 பிரதிவாதி பெயரில் உள்ள கிஸ்தி இரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணம் சட்டப்படியும் சங்கதிகள்படியும் ஆவணமாக ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணம் கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அது எந்த பசலிக்கானது என்றால் ஞாபகமில்லை. கடந்த 2 வருடங்களாக எந்த விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கிரையம் பெற்றபின் சொந்த நெல் விவசாயம் செய்து வருகிறார் என்றும் நான் வழக்கிற்காக விவசாயம் செய்யவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 12.04.2017ல் நான் அனுபவத்தில் இருந்ததை பிரதிவாதி இடையூறு செய்ததாகவும் அதனடிப்படையில் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. லெட்சுமிஅம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் அவர் சொந்த விவசாயம் செய்து வந்தார் என்றும், அவர் இறந்ததற்குப் பிறகு அவருடைய மகள் ஜெயாசீனிவாசன் தாவா சொத்தை மேற்பார்வை பார்த்து சொந்த விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு லெட்சுமி அம்மாளின் வாரிசுகளுக்குள் ஏற்பட்ட வாய்க்கராலான பாகப்பிரிவினை படி கிகருஷ்ணன், கோவிந்தராஜ் என்ற பிச்சைக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டு அவர்கள் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் கோவிந்தராஜ் மற்றும் கிருஷ்ணனிடம் எந்த காலத்திலும் உழவடை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் உடல் உழைப்பு மூலம் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பணம் பறிக்கும் நோக்கத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் மேலும் இவ்வழக்கு இந்நிலையில் நிலை நிற்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.